## தேவி ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலய விவகாரம்:

# ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி முடிவை ஏற்கிறோம்

### ஆலய நிர்வாகம் தகவல்

(எஸ். ஜீவராஜா )

கோலாலம்பூர், மார்ச் 26-

தலைநகர், ஜாலான் மஸ்ஜிட் இந்தியா தேவி ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலய விவகாரத்தில் பேராதரவை நல்கி வந்துள்ள அனைவருக்கும் நன்றி தெரிவித்துள்ள ஆலயத்தின் தலைவர் பார்த்திபன், மக்களின் நல்லிணக்கம் கருதி ஆலயத்தை இடம் மாற்றும் அரசாங்கத்தின் முடிவை ஏற்றுக்கொள்வதாக நேற்று கூறினார்.

ஆலய வளாகத்தில் செய்தியாளர்களை சந்தித்த அவர், கூட்டரசுப் பிரதேச அமைச்சின் அழைப்பின் பேரில் இது தொடர்பான கூட்டத்தில் கலந்து கொண்டதாக தெரிவித்தார்.

இப்போது ஆலயம் அமைந்திருக்கும் இடத்திலிருந்து 50 மீட்டர் தள்ளி உள்ள நிலத்தில் ஆலயத்தை அமைத்துக் கொள்ளுங்கள். இதே அளவிலான நிலம், 4,000 சதுர அடி, அரசாங்கத்தின் நிலம், கெஜட்டில் பதிவு செய்து தருகிறோம் என்று உத்தரவாதம் கொடுத்திருக்கிறார்கள். அதற்கான கடிதத்தையும் அதிகாரப்பூர்வமாக கொடுத்திருக்கிறார்கள் என்று பார்த்திபன் குறிப்பிட்டார்.

கோயில் (நிர்வாகம்) அதை ஏற்றுக்கொண்டுள்ளது. இதன் பிறகு மற்ற பல விஷயங்கள் விவாதிக்கப்படும். அடுத்தடுத்து சந்திப்புகளில் ஆலய நிர்வாகம் கலந்து கொள்ளும். புதிய இடத்தில் ஆலயம் கட்டி முடிக்கப்படும் வரை இப்போதைய இடத்தில்தான் ஆலயம் தொடர்ந்து செயல்படும்.

ஆலயத்தில் அண்மையில்தான் கும்பாபிஷேகம் நடந்தது. அதற்காக நிறைய செலவு செய்திருப்பீர்கள். அதற்கான இழப்பீடு எதுவும் கிடைக்குமா என்ற ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில், அதற்கான செலவுத் தொகையை பொறுத்த வரையில் அரசாங்கம் அதனால் இயன்ற ஆதரவை வழங்க முன்வந்துள்ளது என்று பார்த்திபன் தெரிவித்தார்.

ஆலயம் அமைந்துள்ள இடத்தில் மஸ்ஜிட் மடானி கட்டப்போவதாக சொல்லப்பட்டதால்தான் இந்த பிரச்சினையே எழுந்தது. இதனால் அடுத்தடுத்த காரியங்களை நாங்கள் செய்ய வேண்டியிருந்தது.

இதற்கு முன்னதாகவும் ஆலய விவகாரம் பற்றி டி.பி.கே.எல். (கோலாலம்பூர் மாநகர் மன்றம்) உடன் நிறைய பேச்சுவார்த்தைகளை நடத்தி வந்திருக்கிறோம். இப்போதுதான் ஒரு தீர்க்கமான முடிவை டி.பி.கே.எல். கொடுத்துள்ளது என்றார்.

மிகவும் முக்கியமாக ம.இ.கா. தேசியத் தலைவர் டான்ஸ்ரீ எஸ்.ஏ. விக்னேஸ்வரன், துணைத் தலைவர் டத்தோ ஸ்ரீ எம். சரவணன், அவர்களுடன் அமைச்சர் கோபிந்த் சிங், நாடாளுமன்ற உறுப்பினர் பிரபாகரன்,பொது மக்கள், அரசு சாரா இயக்கங்கள் என அனைவருக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்வதாக பார்த்திபன் மேலும் கூறினார்.